**வேலூர் மாவட்டம்**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**
**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
***ந.க. எண்.1297/MS/மாஒ6/ ஒபக/2022 நாள் : 17.10.2022.***

**பொருள்** : வேலூர் மாவட்டம் – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – மாதிரி பள்ளி – 11ஆம் வகுப்பு மாணவர்கள் சேர்க்கை – Super Quiz – பட்டியலில் கண்டுள்ள மாணவர்களை மதிப்பீட்டில் கலந்து கொள்ள செய்தல் – சார்பு.

**பார்வை** : சென்னை-6, மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் 13.10.2022 நாளிட்ட மின்னஞ்சல் தகவல்.

*****************

பார்வையில் காணும் சென்னை 6, மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் மின்னஞ்சலில் தெரிவித்துள்ள தகவலுக்கிணங்க ஒவ்வொரு மாவட்டங்களிலும் மாதிரிப் பள்ளியில் பதினொன்றாம் வகுப்பு சேர்க்கையின் பொருட்டு மதிப்பீட்டுத் தேர்வு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதிரிப் பள்ளியிலும் 160 அறிவியல் பிரிவு மாணவர்கள் இடம் பெற வேண்டும். (இணைப்பில் கண்டுள்ள 480 மாணவர்களைத் தெரிவு செய்து 1:3 என்கிற விகிதத்தில் 160 மாணவர்களை மதிப்பீட்டுத் தேர்வின் மூலம் தேர்வு செய்யப்பட வேண்டும்). இதன் பொருட்டு நம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள 480 மாணவர்கள் வரும் 19.10.2022 – புதன் அன்று வேலூர், முஸ்லிம் மேல்நிலைப்பள்ளியில் Annexure1_ல் கண்டுள்ள 240 மாணவர்களும், வேலூர், ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப்பள்ளியில் Annexure2_ல் கண்டுள்ள 240 மாணவர்களும் மேற்குறிப்பிட்ட Super Quiz_ல் பங்கேற்க காலை 09.30 மணிக்குள் வருகை புரிய வேண்டும். மேற்குறிப்பிட்ட மதிப்பீட்டுத் தேர்வுக்கான வினாத்தாள், தேர்வினை நடத்துதல், மதிப்பீடு செய்தல் போன்றவற்றை மேற்கொள்ள **Ahaguru** என்ற **Academic Partner** பணியமர்த்தப்பட்டுள்ளது.

மதிப்பீட்டுத் தேர்வில் பங்கேற்கும் மாணவர்களின் தேர்வு எண் அவர்களின் **EMIS ID** ஆகும். மாணவர்கள் தங்கள் **EMIS ID**_யினை தெரிந்து வைத்துள்ளனரா என்பதை அவர்களின் வகுப்பாசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும். இணைப்பில் கண்டுள்ள எந்தவொரு மாணவரும் விடுபடாமல் மதிப்பீட்டுத் தேர்வில் கலந்து கொள்ள சார்ந்த பள்ளியின் தலைமை ஆசிரியர்கள் மற்றும் வகுப்பாசிரியர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

இத்தேர்வு சார்ந்து மாணவர்களிடமும் அவர்தம் பெற்றோர்களிடமும் தகவல் தெரிவித்தும், எவ்வித புகாரும் ஏற்படாதவாறு தேர்வு மையத்திற்கு மாணவர்களை பாதுகாப்பாக அழைத்து சென்று மீண்டும் அழைத்து வர பொறுப்பான ஆசிரியர் / ஆசிரியையை நியமிக்கவும் சார்ந்த தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஒப்பம்**
**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**
**வேலூர் மாவட்டம்.**

இணைப்பு:
1. Annexure1
2. Annexure2

**பெறுநர்:**

1. சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள்.

**நகல்:**

1. சென்னை-6, மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.
3. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர் மாவட்டம், தொடர் நடவடிக்கையின் பொருட்டு.